**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII code of Criminal Procedure)**

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 204 / 2018**

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW7 |
| | Defence |
| | Court |

| | |
|---|---|
| Name | : Thiru. Raja (I.O). |
| Father / Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 2nd day of September, 2025.

**(A1 to A3 are present.)**

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியப்பிரமானம் செய்விக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :

**குறுக்குவிசாரணை :**

இந்த வழக்கில் புகார் என்று கொடுத்தார்கள் என்றால் 12/10/2015 அன்று கொடுத்தார்கள். நேரம் மதியம் 14.30 மணிக்கு கொடுத்தார்கள். புகார் கொடுப்பதற்கு

முன்பதாக காவல் கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் கொடுத்தார்கள் என்றால் சரிதான். அந்த தகவலை யார் எப்போது, எத்தனை மணிக்கு பெற்றுக்கொண்டார்கள் என்ற விவரத்தை என்னுடைய விசாரணையில் தெரியவந்ததா என்றால் இல்லை. புகார் கொடுக்கப்பட்ட அன்றே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். அன்றே CSR No. 734/2015 பதிவு செய்தேன். நான் போட்டுள்ள சட்டப்பரிவுகள் Cognizable or Non-Cognizable Offence என்றால் அது Cognizable Offence ஆகும். அவ்வாறு Cognizable Offence ஆக இருந்தால் முதல் தகவல் அறிக்கை தான் பதிவு செய்யவேண்டும். அவ்வாறு முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்யாததற்கு குறிப்பிட்டு காரணம் கூறமுடியுமா என்றால் காரணம் எதுவுமில்லை. முதல் தகவல் அறிக்கை 21/10/2015 அன்று பதிவு செய்தேன். புகாரை யார் கொடுத்தது, நேரில் வந்து கொடுத்தார்களா என்றால் புகார்தாரர் ராஜேஷ் என்பவர் நேரில் வந்து புகார் கொடுத்தார். புகாரை யார் எழுதியது என்றால் புகார்தாரர் தான் எழுதினார். நிலையத்தில் வைத்து எழுதினாரா என்றால் புகார் எழுதிக்கொண்டு வந்து காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் போட்டு என்னிடம் கொடுத்தார். காவல் கட்டுப்பாட்டு அறைக்கு கொடுத்த தகவலின் பேரில் Patrol Vehicle ரோந்துபணியில் இருந்தவர்கள் சம்பவயிடத்திற்கு சென்றார்களா என்றால் சென்றார்கள். அவர்கள் SSI மற்றும் அவருடைய ஓட்டுநர் சம்பவயிடத்திற்கு சென்றார்கள். அவர்கள் பெயர் தற்போது ஞாபகமில்லை. Patrol Vehicle சம்பவயிடம் சென்ற நேரம் என்ன என்றால் அது எனக்கு ஞாபகமில்லை. சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் இடம் ஆள் நடமாட்டம் அதிகமுள்ள பகுதி என்றால் சரிதான். சம்பவயிடத்திற்கு நான் எப்போது சென்றேன் என்றால் புகாரை பெற்று மாலை 4.00 மணிக்கு சென்றேன். சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் கடையின் நீளம் அகலம் விசாரிணையில் தெரிந்து கொண்டேனா என்றால் 10 x 12 ஆகும். அதை வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. நான் சென்ற சமயம் கடை திறந்திருந்தது. அப்போது யார் இருந்தார்கள் என்றால் புகார்தாரர் என்னுடன் வந்தார். அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் மட்டும் இருந்தார்கள். புகார்தாரர் என்ன தொழில் செய்து வருகிறார் என்றால் பழைய கார்

மற்றும் இருசக்கர வாகனங்களை வாங்கி, விற்று வந்தார். அதற்கான ஆவணங்களை நான் சரிபார்த்து, நீதிமன்றத்தில் சமர்பித்தேனா என்றால் அவருடைய விசிட்டிங் கார்டு மட்டும் பார்த்தேன். நீதிமன்றத்தில் அதை நான் சமர்ப்பிக்கவில்லை என்றால் சரிதான். கடையின் போர்டு பார்த்தேன். அதை போட்டோ எடுத்து நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை. புகார்தாரர் 5 வருடம் லீசு அக்ரிமெண்ட்–ல் கடையை நடத்தி வந்தார். லீசு அக்ரிமெண்ட்–ஐ புகாருடன் சேர்ந்து கொடுத்தாரா என்றால் கடை சேதமடைந்திருந்ததை எதிரிகள் எடுத்து சென்றுவிட்டதாகவும் கூறினார். பக்கத்து கடையில் விசாரணையின் போது பார்த்தசாரதி என்பவருடன் 5 வருடம் லீசு அக்ரிமெண்ட் போட்டதாக கூறினார்கள். 5 லட்சத்திற்கு போட்டதாக கூறினார்கள். அந்த சொத்து யாருடையது என்றால் அண்ணன், தம்பி 3 பேரின் சொத்து என எனது விசாரணையில் தெரியவந்தது. சொத்தானது 3 பேரின் சொத்து அல்ல என்றால் அவருடைய தந்தையின் சொத்து என்றால் சரியல்ல. எதிரிகளின் தந்தை சம்பவத்தின்போது உயிருடன் இருந்தாரா என்றால் உயிருடன் தான் இருந்தார். எதிரிகளின் தந்தை உயிருடன் இருக்கும்போது அவருடன் தான் லீசு அக்ரிமெண்ட் போடவேண்டும் என்றால் சரியல்ல. லீசு அக்ரிமெண்ட்–ல் 2 வருடத்தை 5 வருடமாக மாற்றியுள்ளார்கள் என்றால் மாற்றப்பட்டதாக தெரியவருகிறது. அதுகுறித்து விசாரித்தேனா என்றால் அவர்கள் 5 வருடம் தவறாக 2 வருடம் என போட்டதை திருத்தியதாக என்னிடம் கூறினார்கள். அதை வாக்குமூலத்தில் பதிவு செய்தேன். புகார்தாரருக்கு எந்த வங்கியில் வங்கி கணக்கு உள்ளது என்று கேட்டானா என்றால் ஆக்சிஸ் வங்கியில் உள்ளது என்று கூறினார். காணாமல் போன காசோலை எந்த வங்கியின் காசோலை என்று தெரிந்துகொண்டேனா என்றால் காசோலை குறித்து நான் விசாரிக்கவில்லை. யார் கொடுத்த காசோலை என்று கேட்டேனா என்றால் விசாரித்தேன் அது தற்போது ஞாபகமில்லை. காணாமல் போன மொத்த தொகை எவ்வளவு என்று விசாரித்தேனா என்றால் ரூபாய் 84 ஆயிரம் என்று கூறினார். அதனுடைய Denomination கேட்டேனா என்றால் அது அவருக்கு ஞாபகமில்லை. கடையை யார்

இடித்து சேதப்படுத்தினார்கள் என்றால் புகாரில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். எனது விசாரிணையில் பார்த்தசாரதியின் அண்ணன், தம்பி என்று குறிப்பிட்டுள்ளார்கள். எதிரிகளிடமிருந்து எந்த சான்று பொருட்களையும் கைப்பற்றவில்லை என்றாலும் எதிரிகளிடமிருந்து எந்த ஒப்புதல் வாக்குமூலமும் பெறவில்லை என்றால் சரியல்ல. பட்டியல் சாட்சிகளை என்று எப்போது விசாரணை செய்தேன் என்றால் ஒவ்வொரு சாட்சியையும் சுமார் அரை மணி நேரம் விசாரணை செய்தேன். 10 சாட்சிகளை விசாரணை செய்தேன். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் கடையின் சாவி புகார்தாரரிடமிருந்தது. நான் சம்பவயிடம் சென்றபோது கடை திறந்திருந்தது.

**(மற்ற வழக்குகளை விசாரணை செய்வதற்காக குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது).**

(**உணவு இடைவேளைக்கு பிறகு குறுக்கு விசாரணை தொடர்ச்சி)**

சம்பவ கடையில் என்னென்ன பொருட்கள் இருந்தது என்று விசாரணை செய்தேனா என்றால் விசாரணை செய்தேன். கடையில் வேலைசெய்யும் ஆட்கள் யாராவது இருந்தார்களா என்றால் அவ்வாறு யாருமில்லை. சம்பவ கடையில் கஸ்தூரி ரங்கன் என்பவர் வாடகைக்கு இருந்தார் அவரிடம் புகார்தாரர் வேலைக்கு செய்துவந்த விவரமும் வாடகையை கொடுக்காமல் கஸ்தூரி ரங்கன் தலைமறைவாகிவிட்டார் என்ற விவரம் எனது விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. கஸ்தூரி ரங்கன் மற்றும் எதிரி ஏற்படுத்திக்கொண்ட வாடகை ஒப்பந்தத்தில் புகார்தாரர் அதே போல் கையொப்பமிட்டு எதிரிகளிடம் பணம் கேட்டு மிரட்டுவந்தார் அந்த விவரம் என்னுடைய விசாரணையில் தெரியவந்ததா என்றால் இல்லை. மேற்கூறிய விவரங்கள் ராஜேஷ்–க்கு வழக்கறிஞர் அறிவிப்பும் அதன் நகலை SRMC காவல் நிலையத்திற்கு அனுப்பிய விவரம் தெரியுமா என்றால் இல்லை. 19/10/2015 அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டு அதன் பிறகு காவல் நிலையத்தை அணுகி 21ஆம் தேதி பொய்யான முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. புகார்தாரர் கூறுவதுபோல் 12/10/2015

அன்று எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. சம்பவ கடையே சிவில் நீதிமன்றத்தில் RCOP 73/2015 பூந்தமல்லி PDM நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து அதில் உத்தரவு பெற்று, நிறைவேற்று மனு மூலமாக நீதிமன்ற அமீனா மூலமாக சுவாதினம் பெறப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் இவ்வழக்கை சரிவர விசாரணை செய்திருந்தால் மேற்கூறிய விவரங்கள் எனக்கு தெரியவந்திருக்கும் என்றால் சரியல்ல. வழக்கறிஞர் அறிவிப்பின் அடிப்படையில் பொய்யான புகார் கொடுத்து எதிரிமீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. லீசு அக்ரிமெண்ட் அசல் காணவில்லை என்று புகாரிலோ, வாக்குமூலத்திலோ காணவில்லை என்று புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி ஒரிஜினலை காட்டினால் அதில் உள்ள கையொப்பம் தன்னால் பொய்யாக தயார் செய்யப்பட்டது என்ற விவரம் தெரியவரும் என்பதால் காணவில்லை என்று பொய்யாக புகார் அளித்துள்ளார் என்றால் சரியல்ல. புகார்தாரர் மனித உரிமை கழகம் நடத்தி வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு அந்த கடையை பயன்படுத்தி அந்த பகுதியில் உள்ள கடைகளில் பணம் பறித்துவந்தார் அது சம்பந்தமாக வழக்குகள் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சம்பவம்குறித்து போட்டோ எடுத்துள்ளேனா என்றால் ஆய்வாளர் தான் மேல் விசாரணை செய்தார். சான்று பொருட்கள் எதுவும் 2ஆம் எதிரியிடமிருந்து கைப்பற்றவில்லை என்றால் கடப்பாரையை மட்டும் கைப்பற்றினேன். 2ஆம் எதிரி என் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய வரைபடத்தில் கார்பார்க்கிங் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் புகார்தாரர் கொடுத்த புகாரின்மீது காவல் நிலையத்தில் வைத்து ஆவணங்களை தயார் செய்து எதிரிகள்மீது பொய்யான வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை இல்லை.**</u>

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.
Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.